Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 34 இதழ் - 6 ஜூன் - 2021

தனிப்பிரதி ரூ.10/-


## Online VBS - May - 2021



Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month

# எங்களது இதர வெளியீடுகள்





சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்




## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி
தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி








## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்


- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.




இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.

# THIRUMARAI AASAAN


S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 34 June- 2021 Issue - 6**


ஆசிரியர் உரை

## உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது

**அ**னைவராலும் அறியப்பட்ட வார்த்தைகளுள் **நல்லது, கெட்டது** என்பவைகள் பிரபலமானவை. இவ்விரண்டு வார்த்தைகளையும் தத்தம் வாழ்வின் சூழலுக்கு ஏற்ப அவரவர் பயன்படுத்துவர். சூழலுக்கு ஏற்ப பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால், அவரவர் விருப்பத்திற்கேற்ப பயன்படுத்துவதில் பிரச்சனை இருக்கிறது. எப்படியெனில், ஒருவர் பார்வைக்கு நல்லதாக இருப்பதும், கெட்டதாகத் தெரிவதும் மற்ற எல்லோருடைய பார்வைக்கும் அப்படியிருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த யதார்த்தத்தை நாம் சமுதாயத்தின் எல்லாத் தளங்களிலும் பார்த்துக் கொண்டுதான் உள்ளோம்.

பொதுவாக, நல்லது எவை, கெட்டது எவை என்று ஒரு பட்டியல் தயாரித்தால், **உபத்திரவம்** என்பது எல்லோருடைய ஏகோபித்த ஆதரவுடன் கெட்டது வரிசையில் முதலிடத்தைப் பிடிக்கும். ஏனெனில், உபத்திரவம் என்பது யாராலும் விரும்பப் படாத ஒன்று. ஆயினும், பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்த தாவீது, **நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது** என்று உரக்கக் கூறுகிறார் (சங் 119:71). இவரின் இக்கூற்று ஏனைய எல்லோருடைய ஏற்புக்கும் எதிராக உள்ளது.

அப்படியானால் அதற்கான காரணம் என்ன? ஆன்மீகப் பார்வைக்கும், ஜென்மீகப் பார்வைக்கும் இடையேயான வேறுபாடுதான். ஆன்மீகப் பார்வை தாவீதுக்கு இருந்தபடியால் தான், நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது என்று சொல்வ

தோடு நிறுத்தாமல், ஏன் உபத்திரவம் நல்லது என்பதற்கான காரண த்தையும் கொடுத்துள்ளார். **அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்கிறேன்** என்று. இன்னும் பிரமாணங்களின் வலிமை, உபத்திரவங்கள் தரும் வலியைக் காட்டிலும் மேலானாது என்பதற்குக் கூடுதலான ஒரு காரணத்தையும் கொடுத்துள்ளதை நாம் கவனிக்கத் தவறக் கூடாது. ஆம், வசனம் 67- ல் **நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன். இப்பொழுதோ; உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன் என்று.** தேவனுக்கான பாதையில் வழிதப்பி நடப்பதற்கும், உபத்திரவப்படுவதற்கும் சம்பந்தம் உண்டு என்பதை நாம் உணர்ந்து வழிதப்பாமல் நம்மைக் காத்துக் கொள்வது அவசியம்.

இப்படி, உபத்திரவப்பட்டது ஏதோ ஒரு தாவீதுக்கு மாத்திரம் நன்மையாக மாறியது என்று நாம் எண்ணத் தேவையில்லை. எப்படியெனில், அப்போஸ்தலன் பவுலடியார் ரோமாபுரியாருக்கு எழுதும்போது, **அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் அவரிடத்தில் அன்பு கூருகிறவர் களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்க முடியும்** என்று கூறியுள்ளார். [ரோமர் 8:28]. இந்தக் கொரோனா காலத்தில், ஆவிக்குரிய ரீதியில் வாரத்தின் முதல் நாள்தோறும் சபையாகக் கூடி வர முடியவில்லை, இடைப்பட்ட நாட்களில் வேதபாட வகுப்புகள் இல்லை, பக்தி விருத்திக்கான சிறப்புக் கூட்டங்கள் இல்லை. இப்படி எதுவுமே இல்லாமல் இந்நாட்கள் ஓர் ஆன்மீக உபத்திரவ காலம் போன்றே உள்ளது. ஏதோ உப்பில்லாமல் கஞ்சிக் குடிப்பது போல் தகவல் சாதனங்களின் உதவியால் நேரலையிலும், சமூக ஊடகங்கள் வாயிலாகவும் சில காரியங்கள் நடப்பதுபோல் தோன்றினாலும் யாருக்கும் அதிலே பெரிதாக திருப்தியும் இல்லை. ஆயினும், இதுவும் நன்மைக்கேதுவாக மாறமுடியும் என்று நம்புவோம். அப்படி மாறும் என்று நம்புவதற்கு ஏதுவாக பழைய ஏற்பாட்டுச் சம்பவம் ஒன்றை கவனித்து உறுதி செய்து கொள்ளப் போகிறோம். சரியா?

பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலரின் சரித்திரம் தெரிந்தவர்கள் அறிந்து வைத்திருக்கும் சம்பவம், **பாபிலோனிய அடிமைத் தனம்!** சாலமோன் அரசனின் நாட்களுக்குப் பிறகு இராஜ்ஜியம் இரண்டுபட்டுப் போன நிலையில், தெற்கு ராஜ்ஜியமாகிய யூதாவின் வரலாற்றில் அது ஒரு கருப்பு அத்தியாயம். தேவ விரோதச் செயல்களுக்காக அவர்கள் தீர்க்கதரிசிகளைக் கொண்டு பாங்கான முறையில் எச்சரிக்கப்பட்டனர். ஆனால், **கேட்கமாட்டோம். நடக்கமாட்டோம்** [எரே 6:16,17] என்று தேவ

எச்சரிப்பை எதிர்த்து நின்றதால் இந்த தேசமெல்லாம் வனாந்தி ரமும் பாழுமாகும். இந்த ஜாதிகளோ **எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள்** [எரே 25:11] என்று தீர்க்கதரிசியால் முன்னுரைக்கப்பட்டது. இப்படி சிறைப்பட்டுப் போவது மாத்திரம் முன்னறிவிக்கப்படாமல், அவர்கள் **சிறை யிருப்பிலிருந்து திரும்புவதையும்** தேவன் முன்னுரைத்தார். பாபிலோனில் எழுபது வருஷம் நிறைவேறின பின்பு, நான் உங்களைச் சந்தித்து **உங்களை இவ்விடத்துக்குத் திரும்பி வரப்பண்ணும்படிக்கு, உங்கள் மேல் என் நல் வார்த்தையை நிறைவேறப் பண்ணுவேன்** என்று. [எரே 29:10].

ஆயினும், நாடு கடத்தப்பட்டு சிறைப்படுத்தப்பட்ட நிலையில் காலம் கழிப்பது வேதனை நிறைந்த ஓர் அனுபவம். சொந்த மண்ணில் முகர்ந்த சுதந்திரக் காற்றும், சொந்த நாட்டில் உணர்ந்த பாதுகாப்பு உணர்வும் அங்கு அறவே இருக்காது. பாடுகளுக் குள்ளாகக் கடந்து போவதோடு, ஏராளமான ஏளனங்களையும் எதிர் கொள்ள நேரிடும். கொரோனா காலத்து நான்கைந்து மாதங்களே இது எப்படா முடியும் என்ற மனநிலைக்கு நம்மைத் தள்ளும் போது பாபிலோனிய மன்னன் நேபுகாத்நேச்சார் காலந்தொடங்கி, மேதிய பெர்சிய மன்னன் கோரேஸ் காலம் வரையிலான இரண்டு தலை முறைகளைக் கடந்த எழுபது ஆண்டுகள் என்பதை அப்படியே எண்ணிப் பாருங்கள்; நல்ல வேளை, தேவன் எழுபது ஆண்டுகள் என்பதை முன்னறிவித்திருந்தார். இல்லாவிட்டால் அவ்வளவு தான்!

ஆயினும், அந்த எழுபது ஆண்டுகால அடிமைத்தனம் தாவீது அரசன் நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது என்று சொன்னது போல், அடிமைகளாகச் சென்றவர்களுக்குத் தேவையான பக்திப் பாடங்களைக் கற்றுத் தந்திருக்கிறது. அப்பாடங்கள் என்னவென்று இப்பொழுது கவனிப்போம்.

**I. தேவ சமூகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தனர்**

சிறையிருப்பின் உபத்திரவ நாட்களில் யூதாவின் குடிகள் கற்றுக் கொண்டதாக நம்மால் காணக்கூடிய முதல் பாடம், தேவனுடைய சமூகத்தில் கூடி வருவதின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டதைக் கூறலாம்.

எருசலேம் தேவாலயம் தாவீதின் காலத்தில் திட்டமிடப்பட்டு சாலமோனின் நாட்களில் கட்டிமுடிக்கப்பட்டு, மகிமையான முறையில் [II நாளா 5:14] தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

அந்த மகிமையான ஆலயம் தேவனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட போது, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகன பலியையும், மற்ற பலிகளையும் பட்சித்தது; கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று [II நாளா 7:1]. அந்நாள் முதற்கொண்டு எருசலேம் தேவாலயம் தேவன் தங்கித் தாபரிக்கும் இடமாகவும். அவர்கள் பக்தி வாழ்வின் மையமாகவும் மாறி யிருந்தது.

ஆனால், சிறைப்பட்டு போவதற்கு முன்பான நாட்களில் எருசலேம் தேவாலயம் அவர்கள் மனதிலிருந்து அந்நியப்பட்டு விட்டது. மனாசே ராஜா ராஜ்யபாரம் செய்த நாட்களில் நடந்ததைப் பாருங்கள். **எருசலேமிலே என் நாமத்தை விளங்கப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லிக் குறித்த கர்த்தருடைய ஆலயத்திலே அவன் பலிபீடங்களைக் கட்டி, கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிரகாரங்களிலும் வானத்தின் சேனை களுக்கெல்லாம் பலிபீடங்களைக் கட்டி, தன் குமாரனைத் தீமிதிக்கப் பண்ணி, நாள் பார்க்கிறவனும், நிமித்தம் பார்க்கிற வனுமாயிருந்து, அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறி சொல்லுகிறவர்களையும் வைத்து, கர்த்தருக்கு கோப முண்டாக அவர் பார்வைக்குப் பொல்லாப் பானதை மிகுதியாய் செய்தான்** [II ராஜா.21:4-6]. இப்படியான தொடர் நிகழ்வுகள் சிறைப்பட்டுப் போவதில் போய் முடிந்தது.

அப்படி, சிறைப்பட்டு போய் அடிமைகளாக அல்லல்பட்ட போது தான் புத்தி வந்தது. கெட்ட குமாரன் பன்றிகள் தின்கிற தவிட்டிற்குத் தாளம் போட்ட போது புத்தி தெளிந்ததல்லவா [லூக். 15:16-17]. அது போல. அந்நிய மண்ணில் அடிபட்ட போது தங்களால் அலட்சியப்படுத்தப்பட்ட ஆலய வணக்கம் நினைவுக்கு வந்தது. இன்னும், **இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்** என்னும் தேவ வார்த்தைகள் அவர்கள் மனக்கண்களுக்கு முன்பாக வந்து நிழலாடியது. ஆனால், தேவாலயத்திற்குப் போய் தங்கள் நிலைக்காக வருந்தி, கதறிக் கண்ணீர் விட ஆலயமோ அங்கு இல்லை.

இருப்பினும், எப்படியாகிலும் கர்த்தரைத் தேடியாக வேண்டும் என்று எண்ணியதின் விளைவாகத் தோன்றியவை தான் **ஜெப ஆலயங்கள்** என்று நம்பப்படுகிறது. இந்த ஜெப ஆலங்களின் தோற்றம் பற்றிய நேரிடையான குறிப்புகள் பழைய, புதிய ஏற்பாடுகளில் இல்லை. ஆனால், புதிய ஏற்பாட்டில் இவை பிரபலம். சிறையிருப்பின் போது தேவ இரக்கத்தைப் பெற அந்நிய

மண்ணில் ஆங்காங்கே கூடி ஜெபித்த இடங்கள் பின்னாளில் ஜெப ஆலயங்களாக மாறியுள்ளதாகவே தெரிகிறது. எப்படியோ நேபுகாத்நேச்சாருக்குப் புல்லை மேய்ந்த போது புத்தி வந்தது போல (தானி.4:32–34) நேபுகாத்நேச்சாரால் சிறைப்பிடித்துச் செல்லப் பட்ட யூதர்களுக்கு தொல்லைகளை மேய்ந்த போது தேவாலயம் பற்றிய சிந்தை வந்தது!!

அருமையானவர்களே! இப்பொழுது புரிகிறதா? தாவீது ஏன் நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது என்று கூறினார் என்று! தொழுகைக்கான கூடங்கள் திறக்கப்படாமல் அடைக்கப்பட்டி ருக்கும் இக்கொரோனா காலகட்டத்தில், எல்லாம் இயல்பாக இருந்த நாட்களின் போது, ஆராதனைக் காரியங்களில் அக்கறை காட்டாமல் அலட்சியப்படுத்தியவர்கள் கூட ஆராதனைக் கூடுகைக்கான அனுமதி எப்பத்தான் கிடைக்குமோ என்று ஏங்க ஆரம்பித்திருக்கிறார்கள். பலரிடம் பேசும் போது இது வெளிப் படுகிறது. இத்தொற்று நோயின் காலம் முடியும் வரை காத்திருக்க முடியாமல், ஆங்காங்கே கூடி ஜெபிக்கவும், ஆராதிக்கவும் ஆரம்பித்திருக்கிறார்கள். இவைகளெல்லாம். ஆவிக்குரிய உபத்திரவங்களினால் கிடைக்கும் நன்மைகளாக மாறியுள்ளது. இந்த ஆன்மீக உபத்திர காலம் முடியும் போது, தேவக் காரியங்களில் பெரும் மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

**II. வேத வாக்கியங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்தனர்**

சிறையிருப்பின் உபத்திரவ நாட்களில் யூதாவின் குடிகள் கற்றுக் கொண்டதாக நம்மால் காணக்கூடிய இரண்டாம் பாடம், தேவனுடைய வார்த்தைகளின் மேன்மையைப் புரிந்து கொண்டதைக் கூறலாம்.

சங்கீதக்காரன் தாவீது, தேவனுடைய வார்த்தைகளின் சிறப்பை மையப்படுத்தி எழுதின 119 –ம் சங்கீதத்தில், **உம் முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது** (119:105) என்று கூறியுள்ளார். **அதாவது,** ஆன்மீக வாழ்வில் ஒருவன் அன்றாடம் நடப்பதற்கான வழியை வேத வசனங்கள் காட்டுகிறது என்பதே அதன் பொருள். இது உண்மையாயிருக்க, இரண்டு தலைமுறைகளுக்கும் மேலாக வேத வசனங்களின் வாடையே இல்லாமலிருந்தால் நிலைமை எப்படியிருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்!

சிறைப்பட்டுப் போவதற்கு முன்பாக தீர்க்கதரிசிகள் கொடுத்த தேவ வார்த்தைகளை அசட்டைபண்ணி, எதிர்த்து நின்றதை

எண்ணிப் பார்த்திருப்பார்கள். சிறையிருப்பின் நாட்களில் தேவ வார்த்தைகளை அவர்கள் தேடியும் கிடைக்காமல் போயிருந் திருக்கும். சத்திய வார்த்தைகளுக்கான வறட்சியும், வறுமையும் அங்கே அவர்களால் அனுபவிக்கப்பட்டதாகவே தெரிகிறது. இதன் விளைவாக மான்கள் நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல் (சங்:42:1), இவர்களும் உபத்திரவ காலத்தில் தேவ வார்த்தைகளுக்காகக் கதறியிருப்பதும் தெரிகிறது.

கவனியுங்கள், நெகே. 8:1–9 வசனங்கள் அவர்கள் திரும்பி வந்த போது என்ன நடந்தது என்பதை விளக்குகிறது. சிறைபட்டுப் போவதற்கு முன்பாகக் கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, இஸ்ரவேலிலுள்ள பரிசுத்தருடைய வசனத்தை அசட்டை பண்ணியவர்கள் (ஏசா. 5:24) திரும்பி வந்த போது தலைகீழாக மாறிவிட்டார்கள். ஆம், வசனம்1. ஜனங்கள் எல்லாரும் தண்ணீர் வாசலுக்கு முன்னான வீதியிலே ஒருமைப்பட்டுக் கூடி, கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கற்பித்த மோசேயின் **நியாயப்பிரமாணப் புத்தகத்தைக் கொண்டு வர வேண்டுமென்று வேதபார கனாகிய எஸ்றாவுக்கு சொன்னார்கள் (8:1). 2. சகல ஜனங்களும் நியாயப்பிரமாணப் புத்தகத்திற்குக் கவனமாய்ச் செவிகொடுத்தார்கள்** (8:3). 3. எஸ்றா **நியாயப் பிரமாணப் புத்தகத்தைத் திறந்தபோது, ஜனங்கள் எல்லாரும் எழுந்து நின்றார்கள்.** (8:5). 4. எஸ்றா மகத்துவமுள்ள தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்தரித்தபோது, **ஜனங்களெல்லாரும் தங்கள் கைகளைக் குவித்து. ஆமென், ஆமென் என்று சொல்லி, குனிந்து, முகங்குப்புற விழுந்து, கர்த்தரைப் பணிந்து கொண்டார்கள் (8:6).** இன்னும், **நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது அழுதார்கள்** (8:9). அப்படியானால், உபத்திரவ நாட்களில் புத்தி வந்ததா, இல்லையா?

அருமையானவர்களே! கொரோனா நோய்த் தொற்றின் விளைவாக ஏற்பட்டுள்ள இந்த ஆவிக்குரிய உபத்திரவ காலம் கூட **கர்த்தருடைய வார்த்தைகள் சம்பந்தமாக** கர்த்தரை நம்புகிற வர்கள் மத்தியில் சில மாற்றங்களை ஏற்படுத்தியே இருக்கிறது. வேதாகமத்தைத் தொட விரும்பாதவர்கள் கூட இப்பொழுது தூக்க ஆரம்பித்திருக்கிறார்கள். வேதாகமத்தைத் திறந்து வாசிக்க நேரமில்லை என்றவர்கள், நேரத்தைப் போக்க வழியில்லாமல் வேதாமத்தைப் படிக்கிறார்கள். வாரந்தோறும் ஆராதனையில் கலந்து கொண்டு சத்தியத்தின் போதனைகளைக் கேட்க மறுத்தவர்கள், தொலைக்காட்சிகளுக்கு முன்பாக அமர்ந்தும், சமூக ஊடகங்கள் வாயிலாகவும் வேதத்தின் வார்த்தைகளைக் கவனிக்கிறார்கள்.

ஆயினும், இது போதாது. உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம் [சங் – 119:97] என்னும் நிலை வர வேண்டும். அப்பொழுது தான் தேவனுடைய வார்த்தைகளின் வல்லமையை உணர்ந்து [எபி.4:12] தேவனுடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து [அப். 2:14], கீழ்ப்படிந்து [அப்.2:37], பயபக்தியாய் வாழ்ந்து [அப்.20:32] பரலோகத்தை சுதந்தரிக்க முடியும். செய்வோமா?

**III. ஒழுங்கான செயல்பாட்டின் முக்கீயத்துவத்தை உணர்ந்தனர்.**

சிறையிருப்பின் உபத்திரவ நாட்களில் யூதாவின் குடிகள் கற்றுக் கொண்டதாக நம்மால் காணக்கூடிய இன்னொரு பாடம், தேவனுடைய காரியங்களில் ஒழுங்கு அவசியம் என்று கற்றுக் கொண்டதைக் கூறலாம்.

ஆதியிலே தேவன் பிரமாணங்களைக் கொடுத்த போது அவருடைய எதிர்பார்ப்பைத் தெளிவாக வெளிப்படுத்தினார். நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, **நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்** என்று [உபா 4:2]. பிரமாணங்களோடு என்று சொல்லும் போது, **பிரமாணங்களின் செயல்பாட்டோடு** என்று தான் பொருள். இப்படிச் சொன்னதோடு தேவன் நிறுத்தாமல் நீங்கள் எனக்குச் செவி கொடாமலும், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும், என் கட்டளைகளை வெறுத்து, உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசித்து, என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு என் உடன்படிக்கையை நீங்கள் மீறிப் போடுவீர்களாகில்.... நான் உங்களுக்கு விரோதமாக என் முகத்தைத் திருப்புவேன்; எங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படுவீர்கள்; உங்கள் பகைஞர் உங்களை ஆளுவார்கள்; துரத்துவார் இல்லாதிருந்தும் ஓடுவீர்கள்... என்றெல்லாம் கடுமையாக எச்சரித்திருந்தார் [லேவி.26:14,15,17].

**இந்த எச்சரிப்புகளை மீறி நடந்தபடியால், நலமல்லாத வழியிலே** தங்கள் நினைவுகளின்படி நடக்கிற முரட்டாட்டமான ஜனத்தண்டைக்கு நாள் முழுவதும் என் கைகளை நீட்டினேன். **அந்த ஜனங்கள் என் சந்நிதியிலே நித்தம் எனக்குக் கோபமுண்டாக்கி,** தோட்டங்களிலே பலியிட்டு, செங்கற்களின் மேல் தூபங்காட்டினார்கள்... நான் மவுனமாயிராமல் சரிக்குச் சரிக்கட்டுவேன் [ஏசாயா. 65:2–6] என்றார்.

இப்பஜ நலமல்லாத வழியிலே நடந்து, தேவகோபத்திற்கு ஆளாகி சிறைப்பட்டுப் போன காலத்தில், **தேவக்காரியங்களை நலமான வழியில் மாத்திரம்** செய்ய வேண்டுமென்பதைக் கண்டுகொண்டார்கள் என்றே தெரிகிறது. ஆம், தேவனால் எடுக்கப்பட்ட சிறையிருப்பு என்னும் ஒழுங்கு நடவடிக்கை முழுப் பலனைத் தந்தே இருக்கிறது. எஸ்றா 3:1–5 வசனங்களில் நாம் இதைக் காண முடியும்.

ஆம், மோசேயின் நியாயப்பிரமாணத்தில் **எழுதியிருக்கிறபடி** சர்வாங்க தகனங்களைப் பலியிடும்படிக்கு, இஸ்ரவேலுடைய தேவனின் **பலிபீடத்தைக் கட்டினார்கள்** (3:2). மோசேயின் பிரமாணத்தின்படி நடக்கமாட்டோம், கேட்க மாட்டோம் என்றவர்கள் இப்பொழுது எழுதியிருக்கிறபடி செய்கிறார்கள். அடுத்து, பலிபீடங்களை **அதின் ஆதாரங்களின் மேல் ஸ்தாபித்து,** அதின் மேல் அவர்கள் கர்த்தருக்கு அந்தி சந்தி சர்வாங்கதகன பலிகளைச் செலுத்தினார்கள் (3:3). மறுபடியும், **எழுதியிருக்கிறபடியே** அவர்கள் **கூடாரப் பண்டிகையை ஆசரித்து, நித்திய நியமத்தின்படியும், அன்றாடக் கணக்கின்படியும் ஒவ்வொரு நாளிலும் பலியிட்டார்கள்** (3:4). **எழுதியிருக்கிறபடி** என்பதின் பொருள் உபத்திரவப்பட்டதற்குப் பிறகு தான் புரிந்திருக்கிறது! அப்போ தாவீது உபத்திரவப்பட்டது நல்லது என்றுரைத்தது சரிதானே!

அருமையானவர்களே! இந்த ஆவிக்குரிய உபத்திரவ காலத்தில், பவுலடியார் கொரிந்தியருக்குக் சொல்வது போல், சகலத்தையும் **நல்லொழுக்கமாயும், கிரமமாயும்** நாம் செய்து கொண்டுள்ளோமா? (I கொரி.14:40) பக்தி வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் கிறிஸ்துவின் உபதேசப்படி ஒழுங்கும், கிரமமும் கவனிக்கப்பட்டுக் கைக்கொள்ளப்படுகிறதா? நெஞ்சில் கை வைத்து சிந்திப்போம்! மறுமையின் வாழ்வுக்கு இது மிகவும் முக்கியம்.

அப்பொழுது தான் நாம் ஒவ்வொருவரும் தாவீது போல், இக்கொரோனா காலத்தில் நான் ஆவிக்குரிய ரீதியில் உபத்திரப்பட்டது எனக்கு நல்லது என்று சொல்லவும், சிறைப்பட்டுப்போன இஸ்ரவேல் போல, உபத்திரவம் நல்லது என்று உணரவும் முடியும். ஆமென்! ✝

# பிரசங்கத்தின் வல்லமை எங்கே இருக்கிறது?

Bro. J.C. **சோட்**

**நீ**ங்கள் உலகமெங்கும் போய் எல்லா மக்களுக்கும் சுவி சேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கிறிஸ்து சொன்னார் [மாற்கு 16:15]. அப்போஸ்தலனாகிய பவுலும் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு என்று தீமோத்தேயுவுக்கு எழுதினார் [II தீமோ.4:2]. நாம் இவ்விதமாகக் கட்டளைகளை பெற்றிருக்கிறபடியால் அதற் கேற்றபடி நடந்துகொள்ள வேண்டும். இது, முதல் நூற்றாண்டில் எப்படி உண்மையாயிருந்ததோ அப்படியே இன்றும் உண்மையா யிருக்கிறது.

நம் தேவன் தம்முடைய செய்தியை மனிதனுக்கு அறிவிக்கத் தெரிந்துகொண்ட வழிகளுள் ஒன்றாக சுவிசேஷம் இருக்கிறது. பிரசங்கத்தை, பிரசங்க பீடத்திலிருந்தும் செய்யலாம் அல்லது வேறு ஏதாவது பொது இடங்களிலும் செய்யலாம். இவை எல்லாமே பிரசங்கம் தான். பிரசங்கத்தில் ஒரு பிரசங்கியார் தன் வாய் மூலமாக தேவனுடைய வார்த்தையை அறிவிக்கிறார்.

இன்று சிலர், பிரசங்கம் அதன் வல்லமையை இழந்து கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இதற்கு உதாரணமாக, அவர்கள் சுவிசேஷக் கூட்டங்களைச் சுட்டிக்காட்டுகிறார்கள். முன்பெல்லாம் சுவிசேஷக் கூட்டங்களில் திரளானோர் கூடினார்கள். இப்போதெல்லாம் கூட்டம் வெகுவாகக் குறைந்துவிட்டது என்று கூறுகிறார்கள். சுவிசேஷக் கூட்டங்கள் மாத்திரமல்ல, வேறு எந்த ஆவிக்குரிய கூட்டமாக இருந்தாலும் கூட அங்கேயும் முன்பு போல கூட்டம் கூடுவதில்லை என்று சொல்லுகிறார்கள். அப்படியானால், சுவிசேஷக் கூட்டங்களே தேவைப்படாத காலங்கள் வந்துவிடுமா என்று ஐயப்படத் தேவையில்லை. ஏனென்றால், அப்படி ஒரு காலம் ஒருக்காலும் வராது. கிறிஸ்தவம் தழைக்க சுவிசேஷக் கூட்டம் அவசியம்.

முன்பெல்லாம், பிரசங்கம் ஜனங்களின் கவனத்தை ஈர்த்த அளவுக்கு, இப்போது ஈர்க்காததற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவது காரணம், ஜனங்கள் ஆராதனையிலும்,

ஆவிக்குரிய காரியங்களிலும் நேரத்தை ஒதுக்குவதில் சோர்ந்து போய்விட்டார்கள். அடுத்த காரணம் அல்லது அடிப்படைக் காரணம், செய்திக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட அதிக முக்கியத்துவம் செய்தியைக் கொடுப்பவருக்குக் கொடுக்கிறார் கள். பிரசங்கத்திற்குப் பின்னே, பிரசங்கியார் ஒருவர் இருக்கிறார், இவர்தான் பிரசங்கத்திற்காகப் பயிற்றுவிக்கப்பட்டு, செதுக்கப் பட்டு பிரசங்கபீடத்தில் ஏற்றிவிடப்படுகிறார். அவர் நன்றாக ஆடை உடுத்தி, ஒவ்வொரு வார்த்தையையும் எப்படி உச்சரிக்க வேண்டுமென்று போதிக்கப்பட்டு, எப்படிப் பிரசங்கம் செய்ய வேண்டுமென்று கற்றுக்கொள்ளுகிறார்கள். மேலும், பிரசங்கியார் இனிய குணத்தைப் பெற்றிருப்பது அவசியமாயிருக்கிறது. அவர் எப்போதும் எல்லோரிடமும் நட்புடன் பழகுகிறவராக இருக்க வேண்டும். அவர் ஒருபோதும் எதிர்மறையானவராக இருக்கக் கூடாது. மாறாக, தன் பிரசங்கத்தால் ஜனங்களைக் கட்டு விக்கிறவராக இருக்க வேண்டும். இருப்பினும், பிரசங்கம் பிழைப்புக்கானது என்கிற ஒரு எண்ணம் உருவாகும்போது, பிரசங்கத்தின் மீதான ஆர்வம் ஜனங்களுக்குக் குறைந்து விடுகிறது.

பிரசங்கத்தில் பிரசங்கியாருக்கும் முக்கியப் பங்கு உண்டு. ஆம், அவரால் தேவச் செய்தியைச் சிறப்பான முறையில் கேட்பவர்களுக்குக் கொண்டு செல்ல உதவமுடியும். அதே வேளையில், பிரசங்கத்தின் உண்மையான வல்லமை தேவச் செய்தியில் தான் இருக்கிறது. பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிருந்தது என்று பவுல் குறிப்பிட்டுள்ளார் [ஐ கொரி.1:21]. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் சத்தியம் தான் நம்மை விடுதலையாக்கும் என்று சொல்லியிருக்கிறார் [யோவான் 8:32]. நாம் சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதால் நம்முடைய ஆத்துமா சுத்திகரிக்கப்படுகிறதென்று பேதுருவும் வழிமொழிந்திருக்கிறார் [I பேதுரு1:22].

இன்று அழகான வார்த்தை ஜாலங்களை உள்ளடக்கிய பிரசங்கங்கள், பிரசங்கியாரின் கல்வியை வெளிப்படுத்துகிற பிரசங்கங்கள் ஜனங்கள் மத்தியில் ஒரு தவறான தாக்கத்தை ஏற்படுத்திவிடுகிறது. ஆம், தங்களைப் பற்றி அதிகமாகப் பேசி, தேவச் செய்தியைக் குறைவாகப் பேசுகிறவர்கள் தங்கள் நேரத்தை விரயமாக்குகிறார்கள். அப்படியிராமல், வல்லமையானதும், ஆத்துமாவிலே தாக்கத்தை ஏற்படுத்துகிறதும், வேதாகமத்தை

அடிப்படையாகக்கொண்ட எளிமையான பிரசங்கம் தான் ஜனங்களின் தேவையாயிருக்கிறது. வேதாகமத்தின், இடத்தை வேறு எதுவும் நிரப்பவே முடியாது. ஏனென்றால், ஜனங்களின் ஆத்துமா அப்படிப்பட்ட ஆகாரத்திற்காகத்தான் ஏங்குகிறது. உண்மையாகவே, வேறெதுவும் நம் ஆத்துமாவைத் திருப்திப்படுத்தவே முடியாது என்பது தான் நிதர்சனமான உண்மையாயிருக்கிறது.

ஆகையால், நாம் பிரசங்கியாருக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், மனிதனுக்குத் தேவையான தேவச்செய்தியை முன்னிலைப்படுத்தினால், அதுவே ஊழியத்திற்கு ஏற்றதாயிருக்கும். இதன் பொருள் ஒரு பிரசங்கியார் பிரசங்கத்திற்காக ஆயத்தப்படக்கூடாதென்றில்லை. மாறாக, நாம் பிரசங்கியாருக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட்டு விட்டு, தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பது தான். ஆகையால், பிரசங்கியாரின் பிரசங்கம், ஜனங்களின் செவிகளுக்கு இனிமையானதாக, அவர்களின் பொழுதுபோக்குத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய ஒன்றாக இராமல், தேவனுடைய வார்த்தைகளுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். பிரசங்கமானது தேவனுடைய வார்த்தைகளின்படி பிரசங்கிக்கும் போது அதில் எல்லையில்லா வல்லமையிருக்கிறபடியால் அது ஜனங்களுக்கு மிகப்பெரிய இரட்சிப்பைக் கொடுக்கிறது. ✝

## அழைக்கப்பட்டிருக்கிறோம்

- ✿ **சுவிசேஷத்தால் அழைக்கப்பட்டிருக்கிறோம்** **[II தெசலோனிக்கேயர் 2:13,14]**
- ✿ **இருளிலிருந்து அழைக்கப்பட்டிருக்கிறோம்** **[I பேதுரு 2:9]**
- ✿ **கிறிஸ்துவின் கிருபைக்குள்ளாக அழைக்கப்பட்டிருக்கிறோம்** **[கலாத்தியர் 1:6]**
- ✿ **சமாதானத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்** **[கொலோசெயர் 3:15]**
- ✿ **நித்திய ஜீவனுக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்** **[I தீமோத்தேயு 6:12]**

பெண்கள் பகுதி

# தேவன் எனக்கு ஏன் இதைச் செய்தார்?

Sis. ரேச்சல் இராஜநாயகம்

சென்று போன மாதங்களிலும், தேவன் என்னைக் காப்பாற்றி வந்த நாட்களிலும் எனக்கு உண்டாயிருந்த சீர் இப்பொழுது இருந்தால் நலமாயி ருக்கும். அப்பொழுது அவர் தீபம் என் தலையின் மேல் பிரகாசித்து; அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்து போனேன். தேவனுடைய இரகசியச் செயல் என் கூடாரத்தின் மேல் இருந்தது. அப்பொழுது சர்வ வல்லவர் என்னோடிருந்தார்; என் பிள்ளைகள் என்னைச் சூழ்ந்திருந்தார்கள். என் பாதங்களை நான் நெய்யினால் கழுவினேன்; கன்மலைகளிலிருந்து எனக்காக எண்ணெய் நதிபோல் ஓடிவந்தது; [யோபு 29:2-6].

.... இப்போது என் ஆத்துமா என்னில் முறிந்து போயிற்று; உபத்திரவத்தின் நாட்கள் என்னைப் பிடித்துக் கொண்டது. இராக்காலத்திலே என் எலும்புகள் துளைக்கப்பட்டு, என் நரம்புகளுக்கு இளைப்பாறுதல் இல்லாதிருக்கிறது.

உம்மை நோக்கி கூப்பிடுகிறேன்; நீர் எனக்கு மறு உத்தரவு கொடாதிருக்கிறீர்; ''... என் மேல் கொடூரமுள்ளவராக மாறினீர்; உம்முடைய கரத்தின் வல்லமையால் என்னை விரோதிக்கிறீர்... நன்மைக்கு காத்திருந்த எனக்கு தீமை வந்தது; வெளிச்சத்தை வரப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு இருள் வந்தது. என் குடல்கள் கொதித்து, அமராதிருக்கிறது; உபத்திரவ நாட்கள் என்மேல் வந்தது. வெயில் படாதிருந்ததும், நான் கறுகறுத்து திரிகிறேன். நான் சபையிலிருந்து எழுந்திருக்கும் போது அலறுகிறேன்'' [யோபு 30:16,17; 20,21; 26-28].

''மாறுபாடானவனுக்கு ஆபத்தும், அக்கிரமச் செய்கைக் காரருக்கு ஆக்கினையுமல்லவோ கிடைக்கும்? அவர் என் வழிகளைப் பார்த்து, என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவோ?'' [யோபு 31:3,4].

என்னைப் பகைக்கிறவனுடைய கோபம் என்னைப் பீறுகிறது, என் பேரில் பற்கடிக்கிறான்; என் சத்துரு கொடிய கண்ணினால் என்னைப் பார்க்கிறான் ''... நான் சுகமாய் வாழ்ந்திருக்கிறேன்; அவர் என்னை நெருக்கி, என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி, என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார்.

என்னைப் பகைக்கிறவனுடைய கோபம் என்னைப் பீறுகிறது, அவருடைய வில்லாளர் என்னைச் ’ழ்ந்து கொண்டார்கள்; என் ஈரலைத் தப்ப விடாமல் பிளந்தார்; என் பிச்சைத் தரையிலே ஊற்றிவிட்டார். நொறுக்குதலின் மேல் நொறுக்குதலை என் மேல் வரப்பண்ணினார் (யோபு 16:9.12–14).

என் கண் தேவனை நோக்கி கண்ணீர் சொரிகிறது. ஒரு மனு புத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறது போல, தேவனோடே, மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும்! குறுகின வருஷங் களுக்கு முடிவு வருகிறது; நான் திரும்பி வராத வழியே போவேன். என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக் குழி எனக்கு ஆயத்த மாயிருக்கிறது. (16:20–22; 17:1).

துன்பத்தில் சிக்கித் தவிக்கும் சமயத்தில் அநேகர் இந்த யோபுவைப் போலவே அங்கலாய்க்கின்றனர். ’’தேவன் எங்கே இருக்கிறார்?’’ அவர் எனக்கு ஏன் இப்படி செய்து விட்டார் நான் என்ன கெடுதி செய்தேன்?’’ ’’எனக்கு ஏன் இப்படி நேரிட்டது’’ தேவன் ஏன் என் அழுகுரலைக் கேட்டு என் வேதனையை மாற்றிப்போடவில்லை? ’’என்னால் தாங்கக் கூடாத துயரம் என்னை வாட்டுகிறதே, எனக்கு இனி நிம்மதியே இல்லையா என்று பலவிதாமான கேள்விகள் அவர்கள் உள்ளத்தில் எழும்புகிறது.

தேவன் ஏன் மௌனமாய் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று நாமும் பலமுறை யோபுவைப் போல குறை கூறுகிறோம். ஆனால் அது சரியல்ல. ஏனென்றால், எந்தவிதமான துன்பத்திலும், நெருக்கத்திலும் சிக்கித்தவிக்கும் எவருக்கும், தேவன் நிம்மதியையும், ஆறுதலையும் அளிக்கிறார். துயரம், இழப்பு நேரிடும் சமயங்களில் நாம் நடந்து கொள்ள வேண்டிய விதத்தையும், அவைகளை மேற்கொள்ளும் வழிகளைக் குறித்தும் அவர் நமக்கு ஆலோசனை அளிக்கிறார். வேத வசனங்கள் மூலமாக அவர் நம்மோடு பேசுகிறார்; அவருடைய அளவற்ற அன்பை வெளிப்படுத்துகிறார். வாழ்வின் சுபிட்சமான நேரங்களிலும், துயரமான நேரங்களிலும் அவரை அண்டிக் கொண்டிருப்பதையே அவர் விரும்புகிறார்.

உங்களுக்கு நினைவிருக்கிறதா? இந்த உலகத்தையும் அதிலுள்ள யாவையும் ஆறு நாட்களில் உண்டாக்கி முடித்த போது ’’தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது

மிகவும் நன்றாயிருந்தது'' (ஆதி. 1:31) என வேதம் சொல்லு கிறதே. நாசமேயில்லாத, தீங்கில்லாத, துயரங்களில்லாத, மரணமில்லாத ஒரு சுபிட்சமான உலகையே தேவன் ஏற்படுத்தி யிருந்தார்.

ஆனால், இவையெல்லாவற்றையும் சீர்குலைக்கும் சதிகாரன் ஒருவன் உண்டென்பதை நினைவில் கொள்ளுங்கள். அவன் தேவனுக்கு மட்டுமல்ல, அவர் படைத்த அன்பின் சிருஷ்டிகள் எல்லாவற்றிற்கும் விரோதி. அவன் தான் சாத்தான். உலகத்திற் குள் பாவத்தைக் கொண்டு வந்தவன் அவன் தான். பாவத்தின் விளைவாகவே தேவனுடைய அழகான படைப்பெல்லாம் சீர் குலைக்கப்பட்டு, செயலிழந்து, பேரழிவை நோக்கிச் சென்று விட்டது. '' சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத் தனத்தி லிருந்து விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளை களுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, ... மாயைக்கு கீழ்ப் பட்டிருக்கிறது. ஆகையால் நமக்கு தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது'' (ரோமர் 8:20-22).

தனக்கு நேர்ந்த துன்பங்களுக்கெல்லாம் காரணமாயிருந்த கொடுமைக்காரன் யாரென்பதை மோந்து கொள்ளாமல் தேவன் இடியெல்லாம் செய்து விட்டாரென்று எண்ணி விட்டான். ஆனால், ஆரம்பத்திலிருந்தே சாத்தான் தான் யோபுவைக் குறி வைத்து தாக்கிக் கொண்டிருந்தான் என வேதம் சொல்லுகிறது. அவனை அழிப்பதற்காக சூறாவளிக் காற்று, பெரும் தீ விபத்து போன்ற பலவிதமான இயற்கைச் சீற்றங்களை உண்டாக்கி சதி செய்தான்! (யோபு 1:16,19).

இன்றைய உலகில் இயற்கைப் பேரழிவுகள் வாடிக்கையாகி விட்டன. இவைகளுக்கெல்லாம் முழுப்பொறுப்பாளன், பிசாசானவன் தான். ஒரு வேளை சில சம்பவங்கள் அவனது நேரடிச் செயலாகவும், இன்னும் பல சிலரது தவறுகளின் காரணமாக இயற்கை விதிகள் மீறப்பட்டு நடந்து கொண்டிருந் தாலும், சகல நாச மோசங்களுக்கும் அவன் தான் காரணம். அவன் தேவனுக்கும் அவர் நேசிக்கும் மனிதனுக்கும் மகா விரோதி. நம்மை அழித்து நிர்மூலமாக்குவதே அவனது குறிக்கோள்.

அப்படியானால், தேவன் சர்வ சக்தி படைத்தவராக இருந்தும் இப்படிப்பட்ட பயங்கரமான சேதங்களை, நோய்களை சாத்தான் ஏற்படுத்த அவர்

ஏன் அனுமதிக் கிறார்? என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். ஏனென்றால், மனிதன் தனது சுய விருப்பத்தின்படி வீழ்ந்து பாவ வாழ்க்கையிலேயே நிலைத்திருக்க தீர்மானித்தபடியால் இந்த உலகத்தை ஆளும் அதிபதியாக சாத்தானை அவனே நியமித்து விட்டான். இயேசுவோ இந்த மனிதனுக்கு நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் கிடைக்க ஓர் புதிய வழியை ஏற்படுத்தினார். (2பேதுரு 3:13). அந்தப் புதிய உலகத்தில் தான் ஆதி 1:31ல் உள்ளபடி மீண்டுமாக, எல்லாம் மிகவும் நன்றாய் இருக்கும். இயேசுவை பின்பற்றும் எல்லோரும் இந்த நாசமோசம் இல்லாத புதிய பூமியில் வாழலாம்.

''அப்படியானால், இந்த உலகத்தின் மேல் தேவனுக்கு எந்தவித அதிகாரமுமில்லையா? அல்லது நமக்கு நேரிடுகிற அல்லது வரப்போகிற எந்த ஆபத்தையும் பற்றி தேவன் கவலைப்படுவில்லையா? இல்லவே இல்லை! ஆனால் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்; இயற்கைச் சீரழிவுகளைத் தடுப்பதற்காக, தேவன் இவ்வுலகத்தின் இயற்கை விதிகளை மாற்றியமைக்கப் போவதில்லை. நல்ல கால சூழ்நிலையிலும் சூறாவளிக் காற்று வீசத்தான் செய்யும். அமைதியான சூழ்நிலையிலும் கடும்புயல் மோதத்தான் செய்யும். சற்றும் எதிர்பாராத நேரத்தில் கடும்புயல் மோதத்தான் செய்யும்.

மற்றும் பல துயர சம்பவங்களுக்கு பாவமே நேரடி காரணம். பள்ளி சிறுவர்கள் சக மாணவர்களை கொலை செய்தல், பழங்குடி இனத்தவர் மற்றொரு இனத்தவரை படுகொலை செய்தல், மது பானம் மற்றும் போதைக்கு அடிமையானோர் நிகழ்த்தும் பலாத்காரம், படுகொலை போன்ற இவைகளுக்கு வேறு யாரை நாம் நொந்து கொள்வது? இவையெல்லாம், பாவத்தின் காரணமாக தடம்புரண்ட இந்த தலைகீழ் உலகில் (சமுதாயத்தில்) நடக்கத்தான் செய்யும்.

மனிதன் தானாகவே கெடுத்து சீரழித்துப் போட்ட இந்த உலகத்தை தேவன் மீண்டும் சீர்படுத்திக் கொடுப்பதால் எவ்வித நிலையான பயனும் இந்த பாவசாபம் மிக்க உலகிலிருந்து தமது பிள்ளைகளை பிரித்தெடுத்து, அவர்களுக்கென்று ஓர் உன்னதமான வீட்டை (வாசஸ்தலத்தை) ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

ஆனால், நம் தேவன் நம்மைத் தாங்கி நடத்துவார். அதுவுமின்றி அவரது ஆவியானவரும் நமது உள்ளான மனுஷனில் நம்மை வல்லமையால் பலப்படுத்துவார். – எபேசி 3:16

நமக்கு வரும் இக்கட்டு நேரங்களில் நாம் தேவனுக்கு உண்மையானவர்களாயிருந்தால், சாத்தான் நம்மேல் எய்யும் ஆபத்தான ஆயுதங்களை நமது நன்மைக் கேற்ற கருவிகளாக அவர் மாற்றிவிடுவார். ''நான் உன்னை விட்டு விலகுவது மில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்பது அவருடைய வாக்குத்தத்தமல்லவா? (எபி. 13:5).

தேவன் நமது பரம தகப்பன் என்று அறிவோம். உங்கள் பிள்ளைகளுக்கு ஒரு ஆபத்தான சூழ்நிலையென்றால் நீங்கள் எங்கேயிருப்பீர்கள்? பிள்ளைகளின் வேதனையை உங்கள் வேதனையாகப் பாவித்து கண்ணீர் சிந்துவீர்களல்லவா? அவர் களின் வேதனையை போக்க உங்களால் இயன்ற எல்லா வற்றையும் செய்வீர்களல்லவா? அவர்களை விட்டு விலகாமல், கூடவே இருந்து அவர்களுக்கு துணை செய்வீர்களல்லவா? ஒருவேளை இப்பேற்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் உங்கள் பிள்ளையின் வேதனையைப்போக்க நீங்கள் அருகில் செல்லும் போது, நீர் தான் என் வேதனைக்கும் பிரச்சனைக்கும் காரணம் என்று கூறி உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்குமிடையே ஓர் பிளவு உண்டாகுமானால் உங்கள் மனம் என்ன பாடுபடும் என்பதை கற்பனை செய்து பாருங்கள்.

நம்முடைய வாழ்வின் எந்த சூழ்நிலையிலும் தேவன் நமது ஆவிக்குரிய தகப்பனாக, கூடவே இருக்கிறார். இரத்த சாட்சி யாகிய ஸ்தேவான் கண்ட காட்சி உங்களுக்கு நினைவிருக் கிறதா? தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருப்பதாக பல சந்தர்ப்பங்களில் காட்சியளித்த இயேசு, ஸ்தேவான் கல்லெறியப் படுகிற துயர வேளையில் மனம் தாளாது எழுந்து நிற்பதைக் காண முடிகிறதல்லவா? வேதனைகள் நம்மைத் தாக்கும் போது இந்தக்காட்சி நமக்கு மிகுந்த ஆறுதலை அளிக்கும். நம் வேதனைகளை நீக்க இயேசு எழுந்து நின்று, தம் கரத்தை நீட்டி, தம்மால் இயன்றதையெல்லாம் செய்து நமது துயரத்தை நீக்கி விடுவார் என்பது அதிக நிச்சயமல்லவா?

''அவர் எவ்விதம் நமக்கு உதவி செய்கிறார் ஓர் அற்புதத்தின் மூலம் அல்ல. ஏன்னறால், தமது ஜனத்திற்கு புதியதொரு பிரமாணத்தை அளிக்கும் போதும், ஒரு புதிய செய்தியாளனை அனுப்பும்போதும் மாத்திரமே தேவன் அற்புதங்களை உபயோகிக்கிறார். ஆனால், சந்தர்ப்ப சூழ்நிலைகளை வைத்தே தேவன் பல மகத்தான உதவிகளை தம் ஜனங்களுக்கு செய்திருக் கிறார். சாதாரண ஜனங்கள், அரசாங்கங்கள், சூழ்நிலைகள் மற்றும் சம்பவங்களை, தம்முடைய ஜனங்களுக்கு சரீரபிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் உதவி செய்யும் ஒப்பற்ற கருவிகளாக அவர் பயன்படுத்தியிருக்கிறார்.

ஆக, இக்கட்டு நேரங்களில், தம்முடைய மற்ற பிள்ளைகளாகிய சபையாரின் மனங்களையும், கரங்களையும், உடமைகளையும் துயர்துடைக்கும் கருவிகளாக பயன்படுத்து கிறார். இவர்கள் அவரது குடும்பமாயிற்றே. தம்முடைய பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, பாடுபடும் உலகத்தாருக்கும் சபையின் மூலம் ஒத்தாசை வருகிறது. மேலும், நொறுங்கிப் போன அநேக உள்ளங்களைத் தேற்ற, அவர், உலகப்பிரகாரமான அரசாங்கம், மருத்துவர்கள், மருந்துப் பொருட்கள், ஆலோசகர்கள் போன்றவர்களையும் தமது கருவியாகப் பயன்படுத்துகிறார். மறுவாழ்வு பெற்ற அநேகரின் முகங்களில் மீண்டும் புன்னகை தவழச் செய்கிறார். தாங்கள் பெற்ற நன்மைகளுக்காக அவர்கள் அவரை நன்றியுடன் துதிக்கின்றனர்; சாத்தானின் தீங்குகள் எல்லா வற்றையும் நீக்கி, அவன் வாழ்வை ஆசீர்வதிக்க அவைகளைத் தேவன் பயன் படுத்தியபோது, முன்பு யோபு விரக்தியில் சொன்ன, என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக் குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக நிம்மதியும், ஆனந்தமும் அவன் வாழ்வில் இடம் பிடித்தன.

தேவனையோ அல்லது சாத்தானையோ தேர்ந்தெடுக்கும் உரிமையை மனிதனிடம் தேவன் கொடுத்துவிட்டார். எனவே, கஷ்டகாலத்தில் நாம் தேவனுக்கு உண்மையாயிருப்பதும் அவர் பார்வைக்கு சரியானதை செய்வதும் நமது விருப்பம். அவர் நம்மைக் கட்டாயப்படுத்த இயலாது. ஆனால், நாம் அவருடைய கரத்தை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும் வரை, எந்த துயர சம்பவங்கள் நம் வாழ்வில் வந்தாலும், அவைகள் தலைகீழாக மாற்றப்பட்டு, நமக்கு நன்மையாகவே முடியும் என்று அவர் ரோமர் 8:28ல் வாக்களித்துள்ளார். ✝

## பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவங்கள்

- *பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசுதல் (மத்தேயு 12:32)*
- *பரிசுத்த ஆவிக்கு விரோதமாக பொய் சொல்லுதல் (அப்போஸ்தலர் 5:3)*
- *பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்றல் (அப்போஸ்தலர் 7:51)*
- *பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துதல் (எபேசியர் 4:30)*
- *ஆவியை அவித்துப்போடுதல் (I தெசலோ 5:19)*
- *கிருபையின் ஆவியை நிந்தித்தல் (எபிரெயர் 10:29)*

*வாலிபர் பகுதி*

# ஆவியின் கனியாகிய அன்பு

Dr. ஏபில் நாயகம்

**தே**வனுடைய பரிசுத்தமான நாமத்தில் வாலிபர்களாகிய உங்களுக்கு வாழ்த்துக்கள். தேவனுடைய வார்த்தைகளின் துணையோடு உங்களோடு உரையாடுவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. கடந்த மாதம் ஆவியினாலே சரிரத்தின் கிரியைகளை அழித்துப் போடுவதன் முக்கியத் துவத்தையும், அதை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதையும் பற்றிப் பார்த்தோம். சரீர இச்சைகளை ஒழிப்பதோடு மட்டும் நம் வேலை முடிவதில்லை. ஆவியின் கிரியைகளில் எப்படிப் பெருகி வளருவது என்பதில் நம் கவனம் எப்பொழுதும் இருக்க வேண்டும். கர்த்தருக்கு சித்தமானால் வரும் மாதங்களில் ஆவியின் கனிகள் ஒவ்வொன்றையும் குறித்து தியானிக்க முயற்சி செய்வோம்

நம் தேவன் அன்பாகவே இருக்கிறார் (I யோவான் 4:8 ). ஆனால், அன்பு என்றால் என்ன? ஒரு கிறிஸ்தவனுடைய அன்பின் நிலைப்பாடு என்ன? தேவனிடத்திலும் சக மனிதர்களிடத்திலும் எப்படி அன்புகூர வேண்டும்? என்ற கேள்விகளுக்கு வேதத்தின் துணையோடு நாம் பதில்களைத் தேடுவோம்.

II கொரி. 13:11 ல்– அன்பிற்குக் காரணமாக தேவன் இருக்கிறார் என்று வாசிக்கிறோம். அவர் அன்பின் பிறப்பிடமாகவே இருக்கிறார். அந்த தேவன் அவருடைய அன்பை நம் மீது காட்டியிருக்கிறார். ரோமர் 5:8ல் **நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்க பண்ணுகிறார்** என்று வாசிக்க முடியும். சற்றும் தகுதியில்லாத நம்மேல் அந்த அன்பை விளங்கப் பண்ணினார். ஒருவன் தன் சிநேகிதருக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமாக முழுமையான உச்ச கட்ட அன்பைத்தான் தேவன் நம்மீது காட்டினார். நமக்காக மரித்ததினாலே தேவனின் குமாரனாகிய கிறிஸ்துவும் அவ்வன்பை வெளிப்படுத்தினார்.

தேவனிடமிருந்தும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடமிருந்தும் வந்த அன்பை ருசி பார்த்த நாம் அந்த

அன்பை நம் வாழ்வில் எப்படிப் பிரதிபலிக்கிறோம்? எபேசியர் 5:21 நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள் என்று பவுல் கூறுகிறதை வாசிக்கிறோம். தேவனும் நாம் அவரைப் போலவே அன்பைப் பிரதிபலிக்கிற பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். கொலோ 3:12-14 ல் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ள வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் கொலேசே சபையை உற்சாகப்படுத்துகிறார். Iகொரி 16:14ல் **உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப் படக்கடவது.** பிரியமான வாலிபர்களே! இன்னும் அநேக வசனங்களை நாம் வாசிக்கலாம். ஆனால், நாம் நம்மை கேட்டுக்கொள்ள வேண்டிய ஒரு கேள்வி நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் உண்மையான அன்பு இருக்கிறதா?

நாம் செய்கிற காரியங்களில் அன்பு இருக்கிறதா? என்ற கேள்வியின் அர்த்தம் என்ன? தேவனுடைய அன்பை கிரியைகளில் வெளிப்படுத்துவதாகும். தேவனுடைய நாமத்தை உச்சரிப்பதால் அவர் அன்பை பிரதிபலிக்கிறவர்களாக நாம் மாறி விட முடியுமா? உரத்த சத்தமாய்ப் பாடுவதும், ஆடல், பாடல்களோடு ஆராதனை செய்வதும், தேவனுடைய அன்பை நாம் பிரதிபலிக்கப் போதுமானதாக இருக்குமா?

யோவான் 14:15 ல், நீங்கள் அன்பாய் இருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்று வாசிக்கிறோம். அப்படியென்றால், எதைச் செய்கிறோமோ இல்லையோ, அவருடைய கற்பனைகளான வசனங்களை நாம் நிச்சயம் கைக் கொண்டாக வேண்டும்.

நாம் தேவனுடைய அன்பினாலும் கிறிஸ்துவின் அன்பினாலும் நிலைத்திருக்க வேண்டுமானால் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவும் பிதாவின் அன்பிலே கற்பனைகளைச் செய்வதன் மூலம் நிலைத்திருந்தார் ( யோவான் 15:10). கற்பனைகளை கைக்கொள்ள முதலாவது கற்பனை களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அநேக வாலிபர்கள் தவறாமல் ஆராதனைக்குச் செல்லும் பழக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால், தேவனுடைய வசனங்களைக் கற்று கொள்வதில் மிகவும் பின்தங்கி இருப்பார்கள். தேவனுடைய வசனங்களை, அவருடைய கற்பனைகளைத் தெரிந்து கொள்ளாமல், யாராலும் அதைக் கைக்கொள்ள முடியாது. கைக் கொண்டு நிறைவேற்றாமல் அவருடைய அன்பை நம்மால் பிரதிபலிக்க

முடியாது. ஆக, நாம் கிறிஸ்துவுக்கு சிநேகிதராக மாற அவருடைய கற்பனைகளைக் கற்று பின் அதைக் கைக்கொள்ள வேண்டும்.

I யோவான் 4:20–21 ல், தேவனுடைய அன்பை நாம் நம் வாழ்வில் பிரதிபலிக்க வேண்டுமானால் தேவனுடைய கற்பனைகளைக் கற்று அவைகளுக்குக் கீழ்ப்படிந்து சகோதரரை நாம் சிநேகிக்க வேண்டும் மற்றும் அவர்களிடத்தில் அன்பு கூர வேண்டும். ஒருவேளை, நீங்கள் இந்தக் கற்பனைகளைக் நிறைவேற்றுபவராக இருந்தால் மகிழ்ச்சி. ஆனால் நிறைவேற்றாதவராக இருந்தால், கவனமாகச் சிந்தியுங்கள். I யோவான் 3:16–18 ல் சரீர தேவையிலிருக்கும் சகோதரருக்கு நாம் உதவ வேண்டும். ஆவிக்குரிய வகையில், ஒரு சகோதரன் வழிவிலகிப் போனால். அவரை அணுகி, தப்பிப்போன மார்க்கத்தினின்று அவர்களைத் திருப்பவேண்டும். இதைச் சாந்தமுள்ள ஆவியோடு செய்ய வேண்டும்.

பிரியமான வாலிபர்களே! நாம் ஒவ்வொருவரும் ஆவியின் கனிகளைக் கொடுக்கிறவர்களாகவும், அதில் வளருகிறவர்களாகவும் இருக்க வேண்டும். தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதின் மூலமாகவும், சகோதரர்களை நேசிப்பதின் மூலமாகவும் தேவனுடைய அன்பை நம் வாழ்வில் பிரதிபலிக்க முடியும். அதன் மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்படும். இம்முயற்சியில் வெற்றி பெற தேவன் நமக்கு உதவி செய்வாராக! ஆமென்.

### கிறிஸ்து மூலமாக வெற்றி

- பாவ வாழ்க்கையின் மீது வெற்றி
  ரோமர் 6:35; கொலோ 2:12
- உலகத்தின் மீது வெற்றி
  யோவான் 16:33; I யோவான் 5:45
- பாடுகளின் மீது வெற்றி
  வெளிப்படுத்தின விசேஷம் 2:10; 15:2
- சரீர மரணத்தின் மீது வெற்றி
  ஐ கொரி 15:54,55
- சாத்தான் மீது வெற்றி
  யாக்கோப்பு 4:7; வெளிப்படுத்தின விசேஷம்

சிறுவர் பகுதி




**Hello** குழந்தைகளே! எப்படி இருக்கீங்க? நீங்கள் எல்லாரும் நலமாயிருப்பீர்கள் என நம்புகிறேன்.

திருமறை ஆசானில் வரும் குழந்தைகள் பகுதியைத் தவறாமல் வாசித்து பயனடைகிறீர்கள் என்றும் நம்புகிறறேன். தேவன் நம்முடைய தவறுகளையும், பாவங்களையும் மன்னிக்க வேண்டுமானால், நாம் மற்றவர்களை மன்னிக்க வேண்டுமென்று கடந்த மாதம் படித்தோம்.

இம்மாதம், பழைய ஏற்பாட்டிலுள்ள நோவா தாத்தா சம்பவத்தின் மூலம் உங்களுக்கு ஒன்றைச் சொல்லப் போகிறேன். [ஆதியாகமம் 5– 9 அதிகாரங்கள்]. நமக்கு ஒரு வேளை நோவா தாத்தா பற்றிய காரியங்கள் தெரிந்திருந்தாலும், இதில் அடங்கியுள்ள சில பாடங்களை நாம் ஒவ்வொருவரும் என்றென்றும் நினைவில் கொள்ளும்படி மீண்டும் கவனிக்கப் போகிறோம்.

முதலாவது, தங்களுடைய துன்மார்க்க வாழ்வினிமித்தம் ஒட்டு மொத்த உலகமும் அழிய நேர்ந்தாலும், ஒரே ஒரு குடும்பத்தை மாத்திரம் தேவன் எப்படிக் காப்பாற்றினார் என்று நான் உங்களுக்கு சொல்லப் போகிறேன். தேவன் நினைத்திருந்தால் உலகம் முழுவதையும் அழித்திருக்க முடியும். ஆனால், அவர் அப்படிச் செய்யாமல் தன் வார்த்தைகளுக்கு உண்மையாயிருந்த நோவாவின் குடும்பத்தை 40 நாள் பெரு வெள்ள மழையிலிருந்து பாதுகாத்தார். அவருக்குப் பிரியமாயிருந்தால் அவர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். எச்சூழலிலும் நமக்கு ஒத்தாசை புரிவார். நமது அன்றாட வாழ்வில் தேவனுக்குப் பயந்து அவருக்கு எப்பொழுதும் உண்மையாயிருந்தால் அது போதும்.

இரண்டாவது, நோவாவின் விசுவாசம் குறித்துப் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். பேழை கட்டுவது ஒரு சாதாரண வேலை அல்ல. அங்கே நோவா கர்த்தர் என்னென்ன சொன்னாரே அவைகளை அப்படியே விசுவாசித்து, அவர்

கட்டளையிட்டவைகளைச் செய்து முடித்தான். அது போல, சிறு பிள்ளைகளாகிய நீங்கள், கர்த்தர் எப்பொழுதும் உங்களோடிருக்கும்படி கர்த்தரின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

மூன்றாவது, நோவா சம்பவத்திலிருந்து கிடைக்கும் வேறொரு பாடத்தையும் நாம் கவனிக்க வேண்டும். அவனுடைய மூன்று குமாரரும், தங்கள் தகப்பன் தங்களைச் சரியாய் நடத்துவார் என்று நம்பி தகப்பனுக்கு உதவி செய்து தகப்பன் சொன்னவைகளுக்குக் கீழ்ப்படிந்தார்கள். நான் பேழை கட்டப் போகிறேன் எனக்கு உதவி செய்யுங்கள் என்று நம்முடைய தகப்பன்மார்கள் கேட்டால் உதவி செய்ய நம்மில் எத்தனை பேர் ஆயத்தமாக இருப்போம்? அது ஒரு சிறிய படகு அல்ல. மிகப்பெரிய கப்பல், பெரிய அளவுகளைக் கொண்டது. அதுபோல, நம்முடைய தகப்பன்மார்கள் வேத வாசிக்கச் சொன்னால் எத்தனை பேர் வாசிக்க ஆயத்தமாயிருப்போம்?

பிள்ளைகளே! இதைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள். தேவனுக்கும், உங்கள் பெற்றோரின் நல் வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிவதை உறுதி செய்யுங்கள். அதற்கு மேலாக, அவருக்குப் பிரியமான வழியில் நடந்தால் அவர் ஒரு போதும் கைவிடமாட்டார் என்று விசுவாசியுங்கள். நீதியான வாழ்க்கையை சிறு பிராயம் முதலே வாழ ஆரம்பியுங்கள்! சரியா!

**அன்புடன், உங்கள் பிரெய்ஸி அக்கா.** ✝

## சிறுவர்களுக்கான வேத வினா ( படிக்க அப் . 5:1-11)

1. நோவாவின் மூன்று குமாரர்கள் யார் யார்?
2. எத்தனை நாட்கள் பெருவெள்ளம் இருந்தது?
3. பேழைக்குள் எத்தனை பேர் இருந்தார்கள்?
4. பேழை எந்த மரத்தால் கட்டப்பட்டது?
5. பேழையின் அளவுகள் என்ன?
6. ஜலப்பிரளயம் முடிந்த பிறகு தேவனுடைய வாக்குத்தத்தம் என்ன?

**சரியான பதில் எழுதியவர்களில் சிலர்**

| | | |
|---|---|---|
| பெனிட்டா டென்னி சரோன் | – | காங்கயம் |
| கலையரசன் மோகன்தாஸ் | – | திருச்சி |
| சகாய புஷ்பராஜ் | – | வேலூர் |
| ரோஸ்வின் ஜெஸிந்தா | – | திருச்சி |
| ஜோஸ்வா ரோஷன் | – | காங்கயம் |
| ஜாஸ்பர் பிரின்ஸ் | – | காங்கயம் |
| கிங்ஸ்லி ரூபஸ் | – | காங்கயம் |
| ஜெனிபர் ரெபேக்கா | – | காங்கயம் |

# வெளிப்படுத்தின விசேஷம்
# அதிகாரம் 1

Bro. **ஜேம்ஸ் ராஜ்குமார்**

1. இந்தப்புத்தகத்தின் ஆசிரியர் அல்லது எழுத்தாளர் யார்?

**பதில்:** அப்போஸ்தலனாகிய யோவான்.

2. இந்தப் புத்தகத்தின் ஆசிரியரைப் பற்றி சில குறிப்பு தருக!

**பதில்:**

a. இவர் இயேசு கிறிஸ்துவால் தெரிந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலர்களில் ஒருவர் (லூக். 6:14).

b. இவருடைய தகப்பனார் பெயர் செபதேயு, இவருடைய சகோதரன் பெயர் யாக்கோபு (மத். 10 : 2). இந்த யாக்கோபை ஏரோது பட்டயத்தினாலே கொலை செய்தான் (அப். 12 : 2).

C. இந்த யோவான் அப்போஸ்தலர்களில் இளையவராக இருந்தார் (யோவா. 20:3–5).

d. அந்நாட்களில் ஆசாரியனுக்கு அறிமுகமானவராயிருந்தார், (யோவா. 18:15. 2). இயேசுவுக்கு அன்பான சீஷனாக இருந்தார் (யோவா. 20 : 2).

f. இயேசுவின் தாய் இவரிடமே ஒப்படைக்கப்பட்டார். (யோவா. 19: 26, 27).

g. அப்போஸ்தலர்களில் இவரே அதிகமான காலம் உயிர் வாழ்ந்தார் என்றும் இவருடைய கடைசி காலங்களில் எபேசு பட்டணத்தில் இருந்தார் என்றும் கருதப்படுகிறது.

h. இயேசுவானவர் மறுரூபமானபோது அவரோடு இருந்த மூவரில் ஒருவர் மற்றும் தூண்களாக எண்ணப்பட்ட மூவரில் இவரும் ஒருவர் (மத். 17:1 ; கலா. 2 : 9).

3. இந்த யோவான் மொத்தம் எத்தனைப் புத்தகங்கள் எழுதினார்?

**பதில்:** மொத்தம் 5 புத்தகங்கள், யோவான் எழுதின சுவிசேஷம், 1, 2, 3 யோவான் நிருபங்கள் (கடிதங்கள்) மற்றும் வெளிப்படுத்தின விசேஷம்.

4. இந்தப் புத்தகம் எழுதப்பட்ட காலம் என்ன?

**பதில்:** கி.பி. 91 – 96 ஆக இருக்கலாம். இந்த ஆண்டுகளில் டொமிஷன் (கி.பி. 81–கி.பி. 96) என்பவர் ராயனாக ரோமிலிருந்து அரசாட்சி செய்தார். இவர் காலத்தில் கிறிஸ்தவர்கள் கொடூரமாக துன்புறுத்தப்பட்டனர்.

5. எங்கிருந்து இந்த புத்தகம் எழுதப்பட்டது? வெளி. 1:9.

**பதில் :** பத்மு தீவிலிருந்து. இந்தத் தீவு எபேசு பட்டணத்திற்கு மேற்கே 140 கிலோமீட்டர் தூரத்தில் மலைகள் நிறைந்த அமைதியான ஒரு தீவாக இருக்கிறது. இது ஏஜியன் கடலில் 10 கிலோ மீட்டர் நீளமும் 6 கிலோமீட்டர் அகலமும் மொத்தம் 60 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்புக் கொண்ட ஒரு தீவு.

6. இந்த விசேஷ செய்தியை யோவானுக்கு வெளிப்படுத்தினது யார்?

**பதில்:** தேவதூதன், வெளி. 1:1.

7. தேவதூதனுக்கு இந்த செய்தியைக் கொடுத்தது யார்?

**பதில்:** இயேசுகிறிஸ்து, (வெளி. 1:1).

8. இயேசு கிறிஸ்துவானவருக்கு, இந்த செய்தியை ஒப்புவித்து யார்?

**பதில்:** பிதாவாகிய தேவன், (வெளி. 1:1).

9. இந்தபுத்தகத்தில் வெளிப்படுத்தப்பட்டவைகளில் அநேகம் எப்பொழுது சம்பவிக்கும்? வெளி.1:1.

**பதில்:** சீக்கிரத்தில் சம்பவிக்கும். (வெளி. 1:1, 3) (காலம் சமீபமாயிருக்கிறது); (வெளி. 22 : 6) (சீக்கிரமாய்ச்சம்பவிக்க வேண்டியவைகளை) (வெளி. 22 : 10) (காலம் சமீபமாயிருக் கிறது). மேலும், வருங்காலத்திற்குரிய கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, அனைவரின் உயிர்த்தெழுதல், நியாயத் தீர்ப்பு, பரலோக வாழ்க்கை இவைகளும் கடைசி அதிகாரங்களில் வெளிப்படுத்த.

10. இந்த புத்தகம் எழுதப்பட்ட முறை என்ன?

**பதில்:** இந்த வெளிப்படுத்தல் புத்தகம், அடையாளங்களாக யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டது. உதாரணமாக: வெளி. 13:1ல் மிருகம் என்பது நேரடியாக மிருகம் அல்ல. ஓர் உலக ராஜ்யத்தைக் குறிக்கும். தலைகள் என்பது அதின் அரசர் களைக் குறிக்கும்.

11. இந்த புத்தகத்தைப் படிக்கும்போது நாம் மனதில் கொள்ள வேண்டிய கருத்துக்கள் என்ன?

**பதில்:** a. இந்த புத்தகத்தில் வெளிப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் அடையாளங்களாகச் சொல்லப்பட்டது. அவைகளுக்கு வேறு அர்த்தம் உண்டு.

b. இந்தபுத்தகம் எழுதும்போது தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. ஏனென்றால், யோவான் ராஜ்யத்தில் (**in** the kingdom) இருந்ததாக எழுதுகிறார், வெளி. 1:9.

12. இந்தப் புத்தகம் முதலில் யாருக்கு எழுதப்பட்டது?

**பதில்:** முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு. ஆசியாவிலிருந்த ஏழு சபைகளுக்கு.

13. இந்தப் புத்தகத்தில் கிறிஸ்தவர்களுக்கு சொல்லப்பட்ட முக்கிய செய்தி என்ன?

**பதில்:** உங்களை (கிறிஸ்தவர்களை) உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடேகூட (அப்போஸ்தலர்களோடுகூட) இளைப்பாறுதலையும் பிரதிபலனாகக்கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறது (2 தெச. 1: 6).

14. யோவான் எவைகளைக் குறித்து தன்னைச் சாட்சியாக அறிவிக்கிறார்? வெளி. 1:2.

**பதில்:** இவன் (அப்போஸ்தலனாகிய யோவான்) தேவனுடைய வசனத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைக் குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான்.

15. வெளி. 3:3ன் படி யார் பாக்கியவான்கள்?

**பதில்:** இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்.

16. ஏழு என்ற வார்த்தை இந்த புத்தகத்தில் எத்தனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளது? வெளி. 1:4.

**பதில் :** நாற்பத்து நான்கு முறை.

17. ஏழு என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? வெளி. 1: 4.

**பதில்:** முழுமை, நிறைவு, பரிபூரணம், எல்லாம் அல்லது சகலமும் என்பது ஆகும்.

18. வெளிப்படுத்தினவிசேஷத்தில் சொல்லப்பட்டுள்ள ஏழு சபைகள் இருந்த இடம் எது?

**பதில்:** அப்போது ஆசியா மைனர் என்று அழைக்கப்பட்டது. இதில் ஆசியா, பிரிகியா, பித்தினியா, பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா ஆகிய மாகாணங்களாக ரோமர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. இப்பொழுது அந்த நிலப்பகுதி துருக்கி தேசமாக உள்ளது.

19 வெளி. 1 : 4 ல் தேவன் எப்படி விவரிக்கப்பட்டுள்ளார்?

**பதில்:** இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாக.

20 வெளி. 1 : 4 ல் கூறப்பட்டுள்ள ஏழு ஆவிகள் யாரைக் குறிக்கிறது?

**பதில்:** சகலத்தையும் ஆராய்ந்து அறிகிற ஒரு பரிசுத்த ஆவியானவர் (1 கொரி. 2 : 10).

1. ஞானத்தை அருளும் ஆவியானவர்
2. உணர்வை அருளும் ஆவியானவர்
3. ஆலோசனையை அருளும் ஆவியானவர்
4. பெலனை அருளும் ஆவியானவர்
5. அறிவை அருளும் ஆவியானவர்
6. கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியானவர்
7. கர்த்தருடைய ஆவியானவர்

21 வெளி. 1:5 ல்இயேசு கிறிஸ்து எப்படிப்பட்ட சாட்சி யாயிருக்கிறார்?

**பதில்:** உண்மையுள்ள சாட்சி (யோவா. 8: 14 ; 14 : 2 – 7 ; 18:37).

22 வெளி. 1:5 ல் இயேசுகிறிஸ்து எப்படி மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவராயிருக்கிறார்?

**பதில்:** வேதத்தில் பலர் மரித்த பிறகு உயிரோடு எழுப்பப்பட்டிருந்தாலும் அவர்கள் மீண்டும் மரித்துப் போனார்கள். அவர்களில் யாரும் இப்பொழுது உயிரோடு இல்லை. ஆனால், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வித்தியாசமானது. அவர் நித்தியமான உயிர்த்தெழுதல் அடைந்தார். அவர் மரணத்தை ஜெயித்தார். அவர்மேல் மரணத்திற்கு இனி அதிகாரமில்லை, ரோமர். 6:9 ; கொலோ.1:13 ; வெளி.1:18.

23 வெளி. 1:5 ல் இயேசு கிறிஸ்து யாருக்கு அதிபதியாக இருக்கிறார்?

**பதில்:** பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியாயிருக்கிறார், தேவன் அவரை இம்மட்டும் உயர்த்தினார் (சங். 2:7–12; அப். 2:33 – 36; சங். 110 :1;1 கொரி. 15:25, 26; எபே. 1: 20, 21; பிலி. 2:9–11; லூக். 1:32, 33; அப். 2: 30; 1 நாளா. 29:23). மேலே சொல்லப்பட்ட தகுதிகள் உலகத்தில் மனிதருக்குள்ளே யாருக்கும் இருக்கவில்லை. ஆகையால், இயேசு கிறிஸ்துவோடும், அவருடைய செயலோடும் எந்த மனிதனையும் ஒப்பிட முடியாது.

24 தேவனிடத்திலிருந்து அனுப்பப்படும் இரண்டு ஆசீர்வாதங்கள் என்ன? வெளி. 1:5.

**பதில்:** கிருபையும், சமாதானமும்.

25 வெளி. 1:5ல் இயேசு கிறிஸ்து நம்மிடத்தில் எப்படிப்பட்ட அன்புகூர்ந்தார்?

**பதில்:** புதிய கட்டளையான தெய்வீக அன்பு (அகப்பே) , யோவா. 13:34.

26 இயேசுகிறிஸ்து எதினாலே பாவங்களற நம்மை கழுவுகிறார்? வெளி.1 5.

**பதில்:** அவருடைய இரத்தத்தினாலே (மத். 26:28; ரோம. 5:9; எபே.1:7; கொலோ .1:14, 20; எபி. 9: 14, 22; 13:12; 1 பேது. 1:19).

27 இயேசு கிறிஸ்து நமக்கு எந்த இரண்டு தகுதிகளை தேவனுக்கு முன்பாக ஏற்படுத்தினார்? வெளி. 1:6.

**பதில்:** ராஜாக்களும், ஆசாரியர்களும் (1 பேது. 2:5, 9; வெளி. 5:10).

28 பழைய ஏற்பாட்டு காலத்தில் எந்த மூன்றுபேர் தேவனுடைய வேலைக்காக அபிஷேகம் பண்ணப்பட்டார்கள்?

**பதில்:** ஆசாரியர்கள் (யாத். 28:41. 6). தீர்க்கதரிசி, (1 இராஜா. 19:16). ராஜாக்கள், (1சாமு. 10 :1; 15:1; 16 : 12, 13; 1 இராஜா.1:39). இந்த மூன்று வேலைகளையும் புதிய ஏற்பாட்டு காலத்தில் அதாவது பெந்தெகொஸ்தெ நாள் தொடங்கி இயேசு கிறிஸ்துவே செய்கிறார்.

29 இயேசு கிறிஸ்துவுக்கு எவைகள் என்றென்றைக்கும் உண்டாயிருக்கும்? வெளி.1:5.

**பதில்:** மகிமையும், வல்லமையும்.

# உபதேசங்கள் தேவனுடையது உபதேசங்கள் அப்போஸ்தலருக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது

**Bro. V. ஆசிர்வாதம்**

இயேசுவானவர் 33 ஆண்டுகளுக்குமேல் உலகத்தில் இருந்தார். இதில் கடைசி மூன்று வருடங்களுக்கு மேலாக தேவனுடைய ராஜ்ஜியத்தின் பணியையும் தாம் உலகத்துக்கு வந்த நோக்கத்தையும் நிறைவேற்றினார். தமக்குப் பின் தேவனுடைய சித்தம் செயல்படவும், உலகத்தார் கிறிஸ்து இயேசுவின் மூலம் வருகிற ஆசீர்வாதங்களையும் நித்திய ஜீவனாகிய கிருபையைப் பெற்றுக்கொள்ளவும், இந்த மேன்மையான பணிக்காக சீஷர் களைத் தெரிந்துகொண்டார். அவர்களைத் தனிப்பட்ட வகையிலும் அழைத்திருந்தார். ஒருநாள் மலையின்மேல் ஏறி இரவு முழுவதும் தேவனை நோக்கி ஜெபம் செய்து, பொழுது விடிந்தபோது சீஷர்களை தம்மிடத்தில் அழைத்து அவர்களில் 12 பேரை தெரிந்து கொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார் (லூக் 6 : 12-16). இவர்களைத் தம்மோடு வைத்துக்கொண்டு ஊழியங்களை நிறைவேற்றினார். அவர்கள் தம்மை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கும்படிக்கு, அவர்கள் கண்கள் காணும்படி அற்புத அடையாளங்களை செய்தார். (யோவான் 20 :30) அவர்கள் காதுகள் கேட்கும்படியாக உபதேசங்களைப் பிரசங்கித்தார் (மத் 10 : 27) இவர்களை தம்முடைய உயிர்த்தெழுதலுக்கும், தமது இராஜ்ஜியத்தின் பணிக்கும் சாட்சியாக ஏற்படுத்தினார். பரிசுத்த ஆவியான வருடைய சாட்சி எவ்வளவு முக்கியமானதாயிருக்கிறதோ அவ்வளவு முக்கியமானதாக அப்போஸ்தலருடைய சாட்சியும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பதற்கு முக்கியமான சாட்சியாக இருக்கிறது. எனவே, இயேசுவானவர் தாம் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்ட உபதேச சத்தியங்களை அப்போஸ்தலருக்கு ஒப்புக்கொடுத்தார்.

**1. வேதத்திலுள்ள சாட்சி**

✿ யோவான் 17 : 6, நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப் படுத்தினேன்.

✿ யோவான் 15 : 15 என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.

✿ யோவா 17:8 நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.

✿ யோவா 17 : 14 நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்.

✿ யோவான் 16 : 12, 13 இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

✿ மத் 28 : 19, 20 நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.

✿ கலாத் 1:12 நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை மனுஷனால் கற்றதுமில்லை இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்.

✿ தீத்து 1: 4 எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பிரசங்கத்தினாலே தமது வார்த்தையை வெளிப்படுத்தினார்.

✿ 1 தீமோ 1 : 11 நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆரோக்கியமான உபதேசம்......

✿ யோவா 17 : 14 நான் உம்முடைய வார்த்தையை அவர் களுக்குக் கொடுத்தேன்.

✿ யோவான் 16 : 12, 13 இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப்பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

✿ 1 தெச 2 : 4 சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக் கத்தக்க தாய், தேவன் எங்களை உத்தமரென்று எண்ணின படியே.....

✿ 2 கொரி 5 : 19 தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களி டத்தில் ஒப்புவித்தார்.

மேற்கண்ட வசனங்களின் மூலம் நாம் தெரிந்துக் கொள்வது என்ன? அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவினிடத்தில் நேரடியாக தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டார்கள். உபதே சங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன. அப்போஸ் தலர்கள் என்றால் பொதுவான அர்த்தத்தின்படி அனுப்பப் பட்டவர்கள் என்று பொருள். ஆனால், இந்த அப்போஸ்தலர்கள் விசேஷித்தவர்கள். இவர்கள் இயேசுவினால் நேரடியாக தெரிந்து கொள்ளப்பட்டு, போதிக்கப்பட்டு, ஆயத்தமாக்கப்பட்டு, தம்மிடத் தில் கேட்டிருக்கிற சத்தியங்களை உலகத்துக்கு வெளிப்படுத்தும் பொருட்டு, கிறிஸ்துவினால் நேரடியாக அனுப்பப்பட்டவர்கள். இவர்கள் ஒருவரையொருவர் பார்த்து கற்றுக் கொள்ளுகிறவர்கள் அல்ல. ஒருவரிடத்தில் ஒருவர் விசாரித்துப் போதிக்கிறவர்களு மல்ல. இயேசுவினிடத்தில் நேரடியாக கற்றவர்கள், கற்றவை களை மறந்திருந்தாலும் அவைகளை பரிசுத்த ஆவியினாலே நினைவுப் படுத்தி பேசக்கூடியவர்கள். இவர்களுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதின் மூலம் மட்டுமே எந்த ஒரு மனிதனும் இரட்சிக்கப்பட்டு, ஜீவனுள்ள தேவனுக்கு ஆராதனை செய்து, நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க முடியும். இவர்களைக் குறித்து இயேசுவானவரும் சாட்சி கொடுக்கிறார்.

**2. அப்போஸ்தலரைக் குறித்து இயேசுவின் சாட்சி**

யோவான் 13 : 20 நான் அனுப்புகிறவனை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால், இயேசுவானவர் சொல்லுகிறபடி, அவரால் அனுப்பப்பட்ட அப்போஸ்தலரை ஏற்றுக் கொண்டு அதாவது அப்போஸ்தலருடைய உபதேசங்களை ஏற்றுக்கொண்டு அவர்களுடைய போதனைகளுக்கு கீழ்ப்படியும்போது, நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவருடைய போதனைகளுக்கு கீழ்ப்படிகிறவர்களாகிறோம். இப்படி செய்யும்போது நாம் பிதாவை யும் ஏற்றுக் கொண்டவர்களாகிறோம். இவ்விதமாய் பிதாவின் சித்தம் கிறிஸ்து இயேசு மூலமாய் அப்போஸ்தலருடைய போதனைகளைக் கொண்டு நமக்குள் நிறைவேற்றப்படுகிறது.

யோவான் 20:21–23ல் பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி, அவர்கள் மேல் ஊதி, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள், எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார். இங்கே இயேசுவானவர் தம்முடைய ஆசீர்வாதத்தை அப்போஸ்தலருக்கு அருளிச்செய்த பின், என் பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன். எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கும் என்று சொல்லுகிறார். அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட மனிதனுடைய பாவங்களை விசாரித்து, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்லும்படி இயேசுவானவர் அவர்களை அனுப்பாமல், மாறாக பாவமன்னிப்பை பெற்றுக் கொள்ளும்படியான வழிமுறைகளை காண்பித்து அதற்கான தேவசட்டத்தைப் போதிக்கும்படி அனுப்பினார். உதாரணமாக, பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் பிரசங்கத்தை கேட்ட யூதர்கள், தாங்கள் மேசியாவை சிலுவையில் அறைந்து கொன்ற பாவச் செயலை உணர்ந்து, தங்கள் இருதயங்கள் குத்தப்பட்ட நிலையில், பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, சகோதரரே நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள் (அப். 2 : 37). பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக உங்களுடைய பாவங்களை நாங்கள் மன்னிக்கிறோம், பாவங்களை மன்னிக்க இயேசு எங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார் என்று சொல்லாமல், மாறாக, மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று பேதுரு பதிலளித்தான் (அப். 2 : 38). இங்கே பாவ மன்னிப்புக்கான தேவசட்டத்தை பேதுரு வெளிப்படுத்தி, பாவமன்னிப்பு பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறைகளைக் காண்பித்தான். இவ்விதமாய் ஒவ்வொரு மனிதனும் அப்போஸ்தலருடைய உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்து, ஞானஸ்நானம் பெற்று, இரட்சிக்கப்படமுடியும்.

அப்போஸ்தலருடைய உபதேசத்தைத் தள்ளிவிட்டு ஞானஸ்நானம் பெறாத எந்த மனுஷனுடைய பாவங்களும் மன்னிக்கப்படாது. அப்போஸ்தலருடைய உபதேசங்களுக்கு கீழ்ப்படிவதின் மூலமேயன்றி பாவ மன்னிப்பைப் பெற வேறு

வழியில்லை என்பதை இயேசுவானவர் தெளிவுபடுத்தியிருக்கிறார். அப்போஸ்தலர்கள் தேவனுடைய உபதேசங்களை வெளிப்படுத்தி போதிப்பதின் மூலம் உலகத்தாருடைய பாவ மன்னிப்புக்கு வழிகாட்டிகளாயிருக்கிறார்கள். இயேசுவானவர் தாம் ரத்தம் சிந்தினதினாலே பாவமன்னிப்பை உண்டாக்கினார். அதைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறை களை அப்போஸ்தலரிடத்தில் ஒப்புக்கொடுத்தார். இந்த அதி காரத்தை தான் மேற்கண்ட வசனம் நமக்கு வெளிப்படுத்துகிறது. ஆகையால், எந்த ஒரு மனிதனும் பாவ மன்னிப்பைப் பெற்று இரட்சிக்கப்பட அப்போஸ்தலருடைய உபதேசச் சட்டங்களை கைக்கொள்ள வேண்டும். சிறந்த கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், ஜீவனுள்ள தேவனுக்கு ஆராதனை செய்வதற்கும் அப்போஸ் தலர்கள் காண்பித்த முறைமைகளை கடைப்பிடிக்க வேண்டும். மற்றபடி, நம்முடைய விசுவாசம் வீணாயிருக்கும். நான் உங்களுக்கு பிரசங்கித்தபடி கைக் கொண்டிருந்தால் அதனால் இரட்சிக்கப்படுவீர்கள் மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே (1 கொரி 15 : 2) என்று பவுல் சொல்லுகிறான்.

## நாளும் நடப்பும்

- ☆ ஊரடங்கை மேலும் ஒரு வாரம் நீட்டிக்க உயர் அதிகாரிகள் பரிந்துரை
- ☆ ஜூலை 7 உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார் பிரதமர் மோடி
- ☆ அங்கீகாரம் இல்லாத பள்ளிகளை மூட உத்தரவு
- ☆ 11 ஆம் வகுப்புக்கு நுழைவுத்தேர்வு ரத்து
- ☆ சாம்பியன் ஷிப் டெஸ்ட் போட்டியில் இந்தியா இங்கிலாந்திடம் தோல்வி அடைந்தது.

## Online VBS -2021 -Volunteers



## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பிரசங்கத்தின் வல்லமை ... | 11 |
| பெண்கள் பகுதி | 14 |
| வாலிபர் பகுதி | 20 |
| சிறுவர் பகுதி | 23 |
| வெளிப்படுத்தின விசேஷம் | 25 |
| உபதேசங்கள் தேவனுடையது | 30 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

## Seniors Participants




## Juniors Participants



## Intermediates Participants



## Intermediates Participants




## Participants

